Reg No: DS/VAD/N/SS/VOR/2012/57

# VALVAI SEAMEN WELFARE ASSOCITION

786, JAFFNA ROAD VALVETTITHURAI, SRILANKA

# வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கம்

786, யாழ் வீதி, வல்வெட்டித்துறை, இலங்கை

TP NO:- 0779786096, 0773945431 EMAIL:-vaiswavalvai@gmail.com

27th May 2013

## கலந்துரையாடலும் ஒன்றுகூடலும்
## Discussion and Get- together

எம்மால் உள்ளூரிலும் வெளிநாட்டிலும் (இணையத்தளங்களின் உதவியுடன்) செய்யப்பட்ட விளம்பரத்திற்கமைய கணிசமான நலன்விரும்பிகள் (அம்பாள் தரிசனம் காணவந்தவர்கள் உட்பட) எமது அழைப்பை ஏற்று 28/04/2013ல் எமது சங்கத்தலைவர் திரு.இ.காத்தாமுத்து றஞ்சனதாஸ் அவர்களின் தலைமையில் ஒன்று கூடி ஒரு கலந்துரையாடலை நடாத்தினோம். இக்கலந்துரையாடலுக்கு வருகை தந்திருந்த ஓய்வு நிலைப்பேராசிரியர் திரு.சபா இராசேந்திரம் பிரதமவிருந்தினராக கலந்து சிறப்பித்தார்.
இதில் எட்டப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு.

- ஏற்கனவே வலிந்துதவும் (Voluntary Organisation) நிறுவனமாக இச்சங்கம் பதியப்பட்டு அரசாங்க அங்கீகாரத்தைப் பெற்றமை சகலராலும் பாராட்டப்பட்டு ஏற்கப்பட்டது.
- எதிர்கால நோக்கங்களும் மாலுமிகளின் நன்மைகளும் கருத்தில்கொள்ளப்பட்டு இச்சங்கத்தை ஒரு வியாபார ஸ்தாபனமாக (Limited Liability Company) பதிவு செய்தல்.
- படிப்படியாக இதன் தொழிற்பாடுகளை பன்முகப்படுத்தியும் ஒரு இணைய தளத்தை (Website)ஐ உருவாக்கியும் உலகளாவிய ரீதியில் எம்மை நாமே கப்பற்றொழில்சார் நிறுவனங்களிடையேயும் எமது நலன்விரும்பிகளிடையேயும் எமது தராதரத்தை உயர்த்திக் கொள்ளல்.
- எமது (Vision) தூரநோக்கங்களுள் ஒன்றான் மாலுமிகளை சட்டபூர்வமாக அனுப்பும் (Crew Agent)நிறுவனமாக எம்மை மாற்றிக்கொள்ளும் இலக்கை அடைதல். (Nautical College ஒன்றை ஆரம்பிக்கும் நோக்கமுண்டு
- இவற்றைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்படப்போகும் கம்பனிக்குரிய பணிப்பாளர் சபையை (Board of Directors)ஐ தெரிவுசெய்தல்.
- இதற்காக சங்க அங்கத்தவர்கள், உள்ளூர் நலன்விரும்பிகள், வெளிநாட்டில் வதிபவர்கள் மற்றும் கப்பல் தொழிலில் மதிக்கப்படக்கூடிய பதவிகளில் உள்ளவர்கள் மற்றும் ஓய்வுபெற்றவர்களை தெரிவு செய்து பணிப்பாளர் சபையை உருவாக்குதல்.
  இதற்கான பொறுப்பை தற்சமயம் இயங்கும் நிர்வாக சபையிடம் ஒப்படைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.
- மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கமைய உருவாக்கப்படப்போகும் பணிப்பாளர் சபையில் அங்கம் வகிக்க விரும்பும் தகுதியானவர்களிடமிருந்து இணையதளங்கள் மூலம் விண்ணப்பங்களைக் கோரல்.
- எல்லாவற்றையும் விட மேலாக வெளிப்படைத்தன்மையை (Transparency) கடைப்பிடிக்கும் பொருட்டு சகலரிடமுமிருந்தும் அபிப்பிராயங்களைக் கோரல்.
- சங்கத்திடம் ஏறக்குறைய 60(அறுபது) பெயர்களுடைய அதாவது வெளிநாடுகளில் கப்பலில் வேலை செய்பவர்களுடைய மின்அஞ்சல் (Email Address) விலாசங்கள் உள்ளன. இவர்களை ஒன்றிணைக்கும் பொறுப்பை தற்காலிகமாக இச்சங்கமே பொறுப்பேற்று அவர்களுடன் எமது Email ஊடாக தொடர்பு கொள்ளல்.
- எமது Mission, Vission என்பவற்றை அடைவதற்காக வல்வை மண்ணை நேசிக்கும் இதயங்களான Captions மற்றும் Chief Engineers உடன் தொடர்பு கொண்டு ஒவ்வொருவரும் ஆகக் குறைந்தது இரண்டு Fresh C.D.C Holdersக்கு Sea Service பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுதல்.

*கடலோடிகளாகவும் கப்பலோட்டிகளாகவும்*

*வல்வை மண்ணின் பாரம்பரியத்தை காப்போம் வளர்ப்போம்.*



Towards Restoring & Fostering The Great
Traditions Of The Seafarers Of Valvettithurai

Reg No: DS/VAD/N/SS/VOR/2012/57

# VALVAI SEAMEN WELFARE ASSOCITION

786, JAFFNA ROAD VALVETTITHURAI, SRILANKA

# வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கம்

786, யாழ் வீதி, வல்வெட்டித்துறை, இலங்கை

TP NO:- 0779786096, 0773945431 EMAIL:-vaiswavalvai@gmail.com

- இந்த ரீதியில் ஏற்கனவே Captain கலைநேசன் Ceyline ஊடாக சிலருக்கு தனது சிபாரிசின் மூலம் சந்தர்ப்பம் தந்தமையை பாராட்டுதலுடன், இதே வழியில் ஏனையோரும் உதவி செய்யவேண்டும் என்றும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.
- Fresh C.D.C holders அதாவது புதிதாக சான்றிதழ் பெற்றவர்களுள் சிலருக்கு Pre sea service எடுப்பதற்கு உதவிக்கொண்டிருக்கும் White horse agency திரு.P.அருட்குமரன் அவர்களது சேவையும் ஒத்தாசையும் இங்கு இவ்விடயத்தில் பாராட்டப்பட்டது.
- இவ்வரிசையில் சமீபத்தில் VaiSWA இன் வேண்டுகோளினை ஏற்று Captain P.நீதிராஜா இரண்டு CDC fresh holders இற்கு sea service training இற்கு சந்தர்ப்பம் தந்துள்ளார். இவரை நாம் நன்றியோடு நினைவு கூருவதுடன் தொடர்ந்தும் தனது சேவைகளை வல்வை மண்ணுக்கு அர்ப்பணிக்கவேண்டுமெனக் வேண்டிக்கொள்ளப்பட்டது.
- திருவாளரகள் மணியண்ணா, சாந்தலிங்கம் அண்ணா(முகவர்) கார்த்திகேசு அண்ணா, சண்முகதாஸண்ணா போன்றோரதும் இன்னும் பல முன்னோடிகளின் சேவைகளும் எமது மாலுமிகளுக்கு அவர்கள் ஆற்றும் சேவைகளும் பாராட்டப்பட்டு நினைவு கூரப்பட்டன.
- பெயர்களை குறிப்பிட விரும்பாத சில ஓய்வு பெற்ற எமது ஊரைச்சேர்ந்த கப்பல் துறைசார் வல்லுனர்கள் எமக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை நல்கி வருவதும் நிர்வாகத்தால் எடுத்துக்கூறப்பட்டு அவர்களது சேவை தொடர்ந்து எமக்கு கிடைக்க வேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.
- **எமது இலக்கை அடைய ரூபா.10 இலட்சம் (Rs.1 Million)நிதியுதவி தேவை என உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பலர் சிறியதொகை நிதியுதவி அளித்துள்ளனர் இருந்தும் இத்துடன் ஒரு படிவத்தை இணைத்து அதன் மூலம் தரவுகளையும் நிதியையும் சேகரிக்க இணைய தளங்களை நாடவேண்டும் எனும் தீர்மானமும் உருவாக்கப்பட்டது.**

தயவுசெய்து இத்துடன் காணப்படும் படிவத்தை பூர்த்தி செய்தோ அன்றி தேவையான விபரங்களைத் தந்தோ கீழ்க்காணும் எமது E.Mail விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும். vaiswavalvai@gmail.com.

இந் நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள் சில இத்துடன் இணைக்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கா.றஞ்சனதாஸ் | பூ.அகமணிதேவர் | ந.சிவரெத்தினம் |
| (தலைவர்) | (செயலாளர்) | (சர்வதேச தொடர்பாளர்) |
| 0779786096 | 0771028837 | 0773945431 |

27-05-2013

N.SIVARATNAM
International Coordinator
VaiSWA
Valvai Seamen Welfare Association
Theni Lane, Valvettithurai
Srilanka.
Email: vaiswavalvai@gmail.com

கடலோடிகளாகவும் கப்பலோட்டிகளாகவும்

வல்வை மண்ணின் பாரம்பரியத்தை காப்போம் வளர்ப்போம்.



Towards Restoring & Fostering The Great
Traditions Of The Seafarers Of Valvettithurai

Reg No: DS/VAD/N/SS/VOR/2012/57

# VALVAI SEAMEN WELFARE ASSOCITION

786, JAFFNA ROAD VALVETTITHURAI, SRILANKA

# வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கம்

786, யாழ் வீதி, வல்வெட்டித்துறை, இலங்கை

TP NO:- 0779786096, 0773945431 EMAIL:-vaiswavalvai@gmail.com

## கலந்துரையாடலும் ஒன்றுகூடலும்

## Discussion and Get to-gether

## 28.04.2013

**Seeking financial assistance and collecting data base**

இந்நிகழ்வில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி இப்படிவம் பிரசுரிக்கப்படுகிறது.

➢ **Name** :- ........................................................................................................
பெயர்

➢ **Present Job** :- ........................................................................................................
தற்போதைய தொழில்

➢ **Present Address** :-
தற்போதைய முகவரி

**Local** ........................................................................................................
உள்ளூர் முகவரி ........................................................................................................

........................................................................................................

**Foreign** ........................................................................................................
வெளிநாடு ........................................................................................................

........................................................................................................

➢ **Contact No** :-
தொடர்பு இல.

**Local** ........................................................................................................
உள்ளூர் தொடர்பு இல

**Foreign** ........................................................................................................
வெளிநாடு தொடர்பு இல

➢ **E-mail** :- ........................................................................................................
மின்னஞ்சல்

➢ **Amount of Contribution** :- ........................................................................................................
அன்பளிப்பு தொகை

Following are the details of the account maintained for our association. You may remit your Contribution to this account under advice to us

**Name of the Account: Valvai Seamen Welfare Association**

**Number : Saving A/C 72748770** **Bank : Bank of Ceylon**

**Branch : Valvettithurai(Sri Lanka)** **Swift Code : BCEYLKLX**

I declare that, I will take keen interest on the activities of this association and try to contribute my best.

நான் இச்சங்கத்தின் தொழிற்பாடுகளிலும் முன்னேற்றத்திலும் என்னாலான பங்களிப்பை நல்க விரும்புகிறேன் என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

......................................

Signature
ஒப்பம்

கடலோடிகளாகவும் கப்பலோட்டிகளாகவும்

வல்வை மண்ணின் பாரம்பரியத்தை காப்போம் வளர்ப்போம்.



Towards Restoring & Fostering The Great

Traditions Of The Seafarers Of Valvettithurai